# அன்று



# அறிஞர் அண்ணா

எழுதியவர்
**பிரபா பங்காரு**

எழில் மன்றம் மதுரை.

முதல் பதிப்பு: ஜூன் 1970

# முன்னுரை

குழந்தைகளுக்காக, பெரியவர்கள் படிப்பதற்குப் பயனுள்ள புத்தகங்கள் தருவதும் ஒன்றுகும். சிறந்த தலைவர்களின் வாழ்க்கையைப் பற்றிய புத்தகங்களைப் படிப்பதால் குழந்தைகளின் அறிவு வளரும். எனவே அத்தகைய தலைவர்களில் ஒருவரான **அறிஞர் அண்ணு**வின் வாழ்க்கையை இந்த புத்தகத்தில் சுருக்கமாகவும், குழந்தைகளின் அறிவுவளர்ச்சிக்குப்பயன்படும் நிகழ்ச்சிகளோடும் தயாரித்துவெளியிட்டுள்ளோம்.

குழந்தைகள் இந்நூலை படித்துப் பயனடைவார்கள் என நம்புகிருேம். எனவே இதைக் கண்ணுறும் ஆசிரியர்களும், பெரியவர்களும் தங்கள் பள்ளிகளில் இந்நூலை துணைப்பாடமாக வைத்து ஆதரிக்கும்படி வேண்டுகிருேம். மிக்க நன்றி

—பதிப்பகத்தார்—

ஈசன் பிரிண்டிங் ஒர்க்ஸ், மதுரை-70.

# அறிஞர் அண்ணா

தற்காலத்தில் தமிழகம் என்றழைக்கப்படும் பகுதி பண்டைக் காலத்தில் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இம்மூன்று நாடுகள் தவிர கொங்கு நாடு, மலைய மாநாடு, தொண்டை நாடு, நடுநாடு என்பன போன்ற சில நாடுகளும் இருந்தன அவற்றில் தொண்டை நாடு மிகச் சிறப்புற்றோங்கியது.

பாலாறு, சேயாறு, பொன்முகரி முதலிய ஆறுகள் பாயும் இத்தொண்டை நாட்டின் தலைநகரம் காஞ்சிபுரம். இவ்வூருக்குக் கச்சி, கச்சியம்பதி என்ற பெயரும் உண்டு. இந்தக் காஞ்சிபுரத்தில் நடராசன் என்பவர் வாழ்ந்து வந்தார் அவருடைய மனைவியார் பெயர் பங்காரு அம்மையார் என்பது ஆகும். 1909 ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் நாள் அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பெற்றோர்கள் அக்குழந்தையை சீரோடும் சிறப்போடும் வளர்த்தனர். வறுமைமிக்க நெசவாளர் குடும்பத்திலே பிறந்த அக்குழந்தையே தற்காலத்தில் உலகம் போற்றி புகழும் மறைந்த மாமேதை அறிஞர் "அண்ணா" ஆவார்.

"குழந்தையும், தெய்வமும் கொண்டாடும் இடத்திலே" என்பதற்கேற்ப தன்னிடம் பரிவும், பாசமும் காட்டுகின்றவர்களிடத்திலேதான் குழந்தை ஒட்டி உறவாடும் அதுபோல அண்ணாதுரை தன் சிற்றன்னையான ராசாமணி அம்மையாரிடம் மிகுந்த பற்றுதல் கொண்டிருந்தார் சிற்றன்னையைத் "தொத்தா" என்று அழைப்பது அவ்வூரின் மரபு. அதற்கிணங்க அண்ணாதுரையும் அம்மையாரைத் "தொத்தா" என்று அன்பொழுக அழைத்து தன் விருப்பங்களையும், தேவைகளையும் கூறுவார். அவரது "தொத்தா" அன்று அளித்த ஊக்கத்தால் அண்ணா கல்வியிலும், அரசியலிலும் புகழேணியின் உச்சியில் ஏறமுடிந்தது

## கல்வி:

கல்வி மக்களுக்குக் கண்போன்றது ஆகும். மேலும் ஒருவன் பெற்ற செல்வங்களுள் காலத்தால் அழியாதது கல்விச் செல்வம். எனவே அத்தகைய கல்வியைக் கற்க அண்ணாதுரை காஞ்சீபுரத்தில் உள்ள பச்சையப்பன் தொடக்கப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். தொடக்கப் பள்ளிக்கல்வியை நல்லநிலையில் முடித்து வெளியேறிய அண்ணாதுரையை மேற்படிப்பிற்காக பச்சையப்பன் உயர் நிலைப் பள்ளியில் சேர்த்தனர்.

அண்ணாதுரை இளம் வயதிலேயே மிகுந்த ஞாபக சக்தி படைத்தவராய் விளங்கினார். பள்ளியில் ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களை கூர்மையாகக்கவனிப்பார் பள்ளி விட்டதும் புத்தகங்களை வீட்டில் வைத்து விட்டு விளையாடச் சென்று விடுவார். ஆனால் ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு தேர்விலும் முதல் மதிப் பெண்கள் பெற்று சிறந்த மாணவனாய் விளங்கினார்.

இவர் உயர் நிலைப்பள்ளியில் படிக்கும் பொழுது நெசவுத் தொழிலைக் கற்றுக் கொள்ள விரும்பினார். அதனால் ஓய்வு நேரம் கிடைத்த பொழுது தனக்குத் தெரிந்த நெசவாளர் வீட்டிற்குச் சென்று நெசவுத்தொழிலைக் கற்றுவந்தார். இது பெற்றோருக்குத் தெரியாது. ஒரு நாள் இரவு 9 மணிக்கு வீடு திரும்பிய அண்ணா துரையிடம், தொத்தா “இவ்வளவு நேரம் எங்கே போய் ஊர் சுற்றி விட்டு வருகிறாய்? என்றுகேட்டார். அண்ணாதுரை நடந்தவற்றைச்சொன்னார் ‘தொத்தா’ நாங்கள் இவ்வளவு கஷ்டப்பட்டு உன்னைப் படிக்க வைத்தால் நீ நெசவுகற்றுக் கொள்ளவா போகிறாய்? எங்கள் ஆசையும் உழைப்பும் வீண்தானா? என்றுகவலை யோடு கேட்டார்.

அதற்கு அண்ணாதுரை நெசவுத்தொழில் இழிவான தொழிலா? மக்கள் மானத்தைக் காக்க ஆடை பயன் படுகிறது. அதை நெய்து கொடுப்பவ

ரின் தொழில்உயர்ந்தது அதுவும் நாம்நெசவாளர்குடும்பத்தவரல்லவா எதையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் நான் கற்கச் சென்றேன் நான் செய்தது தவறு? என்று கேட்டார். மகனின் விளக்கவுரையைக் கேட்ட தொத்தா, பெரிய அறிவாளி பேசுவதைப்போலப் பேசுகிறனே என்று எண்ணி வியந்தார்.

தொடக்கப்பள்ளியில் ஒவ்வொரு ஆண்டும் அண்ணுதுரை பரிசுகள் வாங்கிக் கொண்டே இருந்தார். இதைக் கண்ட அப்பள்ளித் தலைமை ஆசிரியர் ஒவ்வொரு முறையும் அண்ணுதுரை என்ற மாணவனே ஆண்டுதோறும் பரிசு பெறுகிருன் அவனைவிட படிப்பில் சிறந்தவனுக வேறு எந்த மாணவனும் இல்லையா என்று கேட்டார. அதற்கு அண்ணுதுரையின் வகுப்பு ஆசிரியர், அவன் படிப்பில் மட்டும்தான் முதன்மையானவன் என்று எண்ண வேண்டாம் நான் தவருமல் பள்ளிக்கு வருவதிலும் அவன் தான் முதன்மையானவன் என்று மிகப் பெருமையோடு சொன்ஞர். அது போலவே பள்ளி மாணவர்களாகிய நாமும் அண்ணுவைப் போலவே தினந்தோறும் பள்ளிக்குத் தவருமல் செல்வது அவசியமன்ருே!

உழைத்துப் படிக்காமலே மதிப்பெண்கள் பெற்று விடலாம் என்பது எல்லா மாணவர்களுக்கும் ஏற்றதன்று. அது போலவே அண்ணுதுரையும் பள்ளி இறுதித் தேர்வில் இரண்டு முறை தோல்வியுற்றார். தொத்தாவிற்கு அண்ணுதுரையின் தோல்வி வியப்பைத் தந்தது. அண்ணுத்துரைக்கு தன்னுடன் பயின்ற மாணவர்களைப் பார்க்கவே வெட்கமாக இருந்தது. எனவே மூன்றும் முறை தான் எழுதப்போகும் தேர்வை நல்ல முறையில் எழுதி, அதிக மதிப்பெண் கள் பெற வேண்டுமென்று உறுதி கொண்டார் அதன் படியே அந்தமுறை தேர் வில் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேறியிருந்தார்.

தொத்தாவிற்கும், அண்ணுதுரையின் பெற்றோருக்கும் அவரைக்கல்லூரி யில் சேர்க்கவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. ஆனால் குடும்பத்தின் செல்வ நிலை அதற்கு இடம் தராமல் போகவே, நகராட்சி அலுவலகத்தில் எழுத்தராக பணி புரியலானார்.

எழுத்தராகப் பணியேற்ற நாளிலிருந்தே அவர்தம் கடமையைச் செவ்வனே செய்து வந்தார். இருந்தும் ஓய்வு நேரங்களில் அறிவு நூல்களை விரும்பிக் கற்று வந்தார். இதற்கிடையில் எழுத்தராகப் பணிபுரிந்துகொண்

டிருந்த அண்ணுவின் காதுகளுக்கு இனிய செய்தி ஒன்று எட்டியது. "பிற்பட்ட வகுப்பினர்களுக்கு கல்விச் சலுகை உண்டென்றும், அதைப் பயன் படுத்திக் கொண்டு கல்லூரியில் பயிலலாம்" என்பதே அச் செய்தி ஆகும்.

எனவே தாம் ஆற்றிவந்த எழுத்தர் பணியை விட்டுவிட்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் மேற்படிப்பைத் தொடர்ந்தார். தற்பொழுது சைனுபஜாரில் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி இருந்த இடத்தில்தான் முன்பு அண்ணுதுரை கல்வி பயின்ற கல்லூரி இருந்தது. கல்லூரியைச் சுற்றிலும் அமைதியான சூல்நிலை இல்லை. வெளியில் தெருவில் வியாபாரிகள் தங்கள் பொருட்களை உரத்த குரலில் விலைகூறிக்கொண்டிருப்பர். வெளியில் எவ்வளவு சத்தம் இருந்த போதிலும், ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களிலேயே கவனமாக இருப்பார் அண்ணு.

ஒருநாள் கல்லூரியில் பேராசிரியர் ஒருவர் பாடம் நடத்திக்கொண்டிருந்தார். அன்று வெளியில் அதிக சத்தமாக இருந்தது. ஆசிரியர் பாடம் கற்பிப்பதை விட்டு ஒருமாணவனை நோக்கி கேள்வி கேட்டார். அந்த மாணவன் திகைத்துப் போய் ஏதும் புரியாமல் "ஒன்றரையணு" என்று பதில் கூறிவிட்டான். அவன் விடையைகேட்ட எல்லோரும் சிரித்தனர். அந்த மாணவன அவ்வாறு விடை

யளிப்பதற்கு காரணம் வெளியில் கடைக்காரன் "எதை எடுத்தாலும் ஒன்றரையணு" என்றுவிற்றுக்கொண்டிருந்ததால் ஏற்பட்ட விளைவுதான் ஆசிரியர் மற்றும் பல மாணுக்கர்களைக் கேட்டபொழுது எல்லோரும் விழித்தனர். ஆனால் அண்ணுதுரை மட்டும் சரியான விடையளித்தார். பேராசிரியர் மகிழ்ந்து "சுற்றியுள்ள ஆரவாரங்களில் தன் கருத்தைச் செலுத்தாது ஒன்றிலேயே கவனமாக இருப்பவன் தான் நிலையான அறிவைப் பெறமுடியும் எனவே நீ ஒரு சிறந்த அறிவாளியாகத் திகழ்வாய், அதற்குரிய அறிகுறிகள் உன்னிடம் உள்ளன" என்றார்,

அண்ணுதுரை மிகுந்த ஞாபக சக்தி உடையவர் என்று முன்பே கூறினேம் அல்லவா! அதற்கு ஒரு சான்று காண்போம். அண்ணு இளமையிலிருந்தே பள்ளியில் தாம் கற்ற பாடங்களை நெட்டுருப் போடமாட்டார். குறிப்பு எடுக்கும் பழக்கமும் அவரிடம் கிடையாது. கல்வியின் லட்சியம் மதிப்பெண் பெறுவது அல்ல அறிவுநலம் பெறுவதே அதன் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும் என்பதே அண்ணுதுரையின் குறிக்கோள் ஆகும்.

ஒரு நாள் ஆங்கிலப் பேராசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார் எல்லா மாணவர்களும குறிப்பெடுத்துக் கொண்டிருந்தனர். ஆனல் அண்ணு

துரை மட்டும் குறிப்பு எடுக்காமல் இருந்தார். அதைக்கண்ட ஆசிரியர் 'நீ ஏன் குறிப்பெடுக்கவில்லை" என்றுகேட்க அதற்கு அண்ணாதுரை "நான் குறிப்பெடுப்பதை விரும்பாதவன். உருப்போட்டு எழுதுவதையும் நான் வெறுப்பவன்," என்று அடக்கமாக பதில் அளித்தார். அதற்கு ஆசிரியர் சினத்துடன் "நீ மிகுந்த கர்வம் பிடித்தவன் என் பாடத்தை நீ அலட்சியப் படுத்துகிறாய். இதன் விளைவை பின்னால் உணர்வாய்" என்று கூறினார்.

அண்ணாதுரை தாம் கேட்டவற்றை உள்ளத்தில் பதியவைத்து வெளிப் படுத்தும் திறன் கொண்டவர். இதைப் பாராட்ட வேண்டிய ஆசிரியர் சினம் கொள்கிறாரே என்று அண்ணாதுரை வருந்தினார். இதற்கிடையில் இடை நிலை வகுப்பில் அண்ணாதுரை முதல் வகுப்பில் தேர்ச்சி அடைந்தார். அதை அறிந்த ஆங்கிலப் பேராசிரியர் அண்ணாதுரையை அழைத்து அவரது ஞாபக சக்தியை பாராட்டி, சினம் கொண்டதற்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

இடைநிலை வகுப்பில் தேர்ச்சி பெற்ற அண்ணாதுரைக்குப் பட்டப்படிப்பு படிக்கவேண்டுமென்ற ஆவல் எழுந்தது. ஆனால் குடும்ப பொருளாதார நிலை இடங்கொடுக்கவில்லை. மேலும் அண்ணா கல்லூரியில் படிக்கும் பொழுது விடு

முறைகாலத்தில் தம் சிற்றன்னையான, தொத்தாவீட்டிற்குச் செல்வார். ஒவ்வொரு விடுமுறைக்கும் தம் சிற்றன்னையின் நகைகள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைவதைக் கண்டார். தொத்தாவிடம் அதைக் கூறி வருத்தப்படுவார்.

ஒரு நாள் அவர் தன் சிற்றன்னையிடம் "நான் இனிமேல் படிக்கச் சென்னைக்குப் போகப் போவதில்லை. நான் படித்தது போதும். நீங்கள் உங்கள் நகைகளை இழந்ததும் போதும்'' என்று கூறினர். அதற்கு தொத்தா "நகையா பெரியது, உன் படிப்புத்தான் பெரிது நீ படித்து முடித்து வேலையில் அமர்ந்து விட்டால் நான் விற்ற நகைகளைப் போல் பத்து மடங்கு வாங்கிக் கொள்ளலாம் நீ வருந்தாதே" என்று ஆறுதல் கூறினர்.

அண்ணுதுரை முதல் வகுப்பில் தேர்ச்சி அடைந்தும், படிப்பை மேலே தொடரப்போவதில்லை என்பதைக் கல்லூரி முதல்வர் சின்னத்தம்பி பிள்ளை அறிந்தார். அவர் அண்ணுதுரையை அழைத்துப் பேசினுர். அவர் தம் குடும்பத்தின் நிலையைக் எடுத்துக் கூறவே சின்னத்தமபி பிள்ளை மிகவும் மனம் வருந்திஞர் உடனே அவர் "நீ பி ஏ. படித்து முடிகக 3 ஆண்டுகள் ஆகும், அந்த மூன்று ஆண்டுகளுக்குரிய புத்தகச்செலவை நான் ஏற்றுக்கொள்கிறேன் நீ தொடர்ந்து படி" என்று கூறவே அண்ணுதுரையும் சம்மதித்தார். அவர் படிப்பு நலத்திற்கென

அவரது குடும்பத்தினர், காஞ்சிபுரத்திலிருந்து வெளியேறி பெத்தநாயக்கன் பேட்டையில் குடியேறினர். அங்கு அவரது வீட்டிற்கு அருகில் பல குடும்பங்கள் இருந்தன. எப்பொழுதும் குழந்தைகளின் சத்தமும் கூச்சலுமாக இருக்கும் அண்ணாதுரை சகிப்புத் தன்மையோடு அதை பொறுத்துக் கொண்டு படிப்பார். இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் படிக்க உட்காருவார். விடியற்காலம் நான்கு அல்லது ஐந்து மணிவரை படிப்பார்.

"கல்லூரிப் பாடங்கள் மட்டுமே போதிய அறிவு வளர்ச்சியை அளித்து விட முடியாது" என்பதை அறிந்த அவர் வேறு பல நூல்களையும் படித்தார். சிறந்த நூல்நிலையங்கட்கு சென்று அறிவுவழங்கும் நூல்களை ஆவலுடன்படித்தார். மேலும் கல்லூரியில் படிக்கும் பொழுதே அண்ணாதுரை எல்லாச் சொற்பொழிவு களிலும் கலந்து கொள்வார். தான் எடுத்துக்கொண்ட கருத்தை விளக்கி கூறு வதில் அண்ணாவுக்கு நிகர் அண்ணாதான். அவர் பேசுவதில் மட்டும் தான் வல்ல வராக விளங்கினர் என்று எண்ண வேண்டாம். அது போலவே எழுதுவதிலும் வல்லவராக விளங்கினர்.

மாணவர்களின் கட்டுரைகளைத் திருத்திக் கொண்டிருந்த பேராசிரியர் அண்ணாதுரையின் கட்டுரையைக் கண்டு மிகவும் வியப்படைந்தார். அதுவரை

அந்த ஆசிரியரே கேட்டறியாத பல கருத்துக்கள் அதில் எழுதப்பட்டிருந்தன. ஆசிரியர் அண்ணுதுரையை அழைத்து "உன் கட்டுரை மிக நன்ருக இருக்கிறது. எந்தெந்த நூல்களைப் பார்த்து எழுதினுய்?" என்று கேட்டார். அதற்கு அவர் "நான் எந்த நூலையும் பார்த்து எழுதவில்லை. என் உள்ளத்தில் எழுந்த சொந்தக் கருத்துக்கள் தாம் அவை" என்ருர். அவரது விடையைக்கேட்ட ஆசிரியர் மேலும் வியப்படைந்து "நீ எதிர் காலத்தில் சிறந்த எழுத்தாளனுவாய்" என்று அண்ணுதுரையைப் பாராட்டினுர்.

## திருமணம்:

அண்ணுதுரை கல்லூரியில் பயிலும் போதே இராசாமணி அம்மையார், அவருக்கு திருமணம் செயதுவைக்க முயன்ருர். அண்ணுதுரை சிற்றன்னையின் விருப்பத்திற்குமாருக நடக்க விரும்பாமல் திருமணத்திற்கு சம்மதித்தார். 1930ம் ஆண்டில் அண்ணுரைக்கும், ராணி அம்மையாருக்கும் திருமணம் சிறப்பாக நடந்தது.



அறிஞர் அண்ணாவும், அவரது துணைவியார் இராணி அம்மையாரும்

ராணி அம்மையாரின் நற்பண்புகளுஞ், இனிய பேச்சுகளும் அவரைப் பெரிதும் மகிழ்வித்தன. அம்மையாரும் தம் கணவருடைய ஆழ்ந்துஅகன்ற கல்வி அறிவையும், தூயநாட்டுப் பற்றையும், சிறந்தஒழுக்கத்தையும் கண்டுமனம்மகிழ்ந் தார். தம் கணவரின் குறிப்பறிந்து மனம் மகிழ நடந்து கொண்டார். இத்தகைய மன ஒற்றுமையாலும், செயல் ஒற்றுமையாலும் அவ்விருவரும் மலரும், மணமும் போலவும், உடலும், உயிரும் போலவும் ஒன்றுபட்டு வாழ்ந்து வந்தனர்.

அண்ணாதுரை திருமணம் செய்து கொண்ட போதும் படிப்பில் உள்ள ஆர்வம் குன்ருமல் படித்து வந்தார். அப்பொழுது சில இளைஞர்கள் "சுய மரி யாதை இளைஞர் மன்றம்" என்ற மன்றத்தைஏற்படுத்தினர். அந்தஇளைஞர்களுல் சிலர் அண்ணாவிற்கு நெருங்கிய நண்பர்களாக விளங்கினர். அண்ணாதுரைக்கு சுயமரியாதை இயக்கத்தில் நாட்டமிருந்தபோதிலும் கல்லூரி மாணவராக இருந்த

தால் எந்த நிகழ்ச்சியிலும் நேரடியாகக் கலந்து கொள்ளவில்லை. "படிக்கும் துறையில் இருக்கும் பொழுது மாணவர்கள் அரசியலில் நுழையக் கூடாது" என்பது அண்ணாவின் குறிக்கோள். அவருடைய குறிக்கோளை மாணவர்களாகிய நாம் நம் வாழ்விலும் கடைப்பிடிக்க வேண்டியது மிகவும் அவசியமன்றோ.

அண்ணாதுரை கல்லூரியில் படிக்கும் பொழுது தொழிலாளர் நலம் காக்கும் தலைவர்களில் ஒருவரான திரு. பாசுதேவ் என்பவரின் நட்பைப் பெற்றார். அவருக்குத் தமிழில் பேசவராது. அவரது அழகிய இலக்கிய நடை மிகுந்த ஆங்கிலச் சொற்பொழிவுகளை, அழகுத் தமிழில் மொழி பெயர்க்கும் தொண்டினை மேற்கொண்டார். பாசுதேவின் நட்பால் நீதிக் கட்சியின் கொள்கைகளை அறிந்து கொண்ட அண்ணா நீதிக்கட்சியில் சேர்ந்து பொது மக்களுக்குத் தொண்டுபுரிய முடிவு செய்தார்.

பி. ஏ. ஆனர்சு தேர்வில் தேர்ச்சிபெற்ற அண்ணாதுரை காஞ்சியில் உள்ள நடுத்தரப்பள்ளியொன்றில் ஆசிரியராக அமர்ந்தார். பி. ஏ. ஆனர்ஸ் ஆகஇருந்தும் கல்லூரியிலோ, உயர் நிலைப் பளளியிலோ வேலைகிடைக்கவில்லை. ஆயினும் ஆசிரியர் பணியைச் சிறந்த பணியாகக்கருதினார். நாட்டின் எதிர்காலச் சிற்பிகளை உருவாக்கும் பேறு தமக்குக் கிடைத்ததாக பெருமை கொண்டார். மாணவர்களுக்குப் பாடம் கற்பிப்பதில் ஈடு இணையற்ற ஆசிரியராக விளங்கினார். அதையடுத்து சென்னையில் உள்ள கோவிந்தப்ப நாயக்கன் பள்ளியில் சிலகாலம் ஆசிரியராகப் பணி புரிந்தார்.

ஈரோடு வெங்கடகிருட்டின நாயக்கர் மகன் இராமசாமி என்பவர் காங்கிரசு இயக்கத்தில் தீவிர தொண்டராக இருந்தார். மதுவிலக்குக் கொள்கைக்காகபோராடும் வீரராக இருந்தார். சாதி ஒழிப்பு மூடநம்பிக்கை ஒழிப்பு ஆகிய சீர்திருத்தக் கொள்கைகளை நாடெங்கும் பரப்பத் தொடங்கினார். **1934** ல் நடை

பெற்ற செங்குந்த மாநாட்டில் அண்ணுதுரை சொற்பொழிவு ஆற்றினர். அப்போது அவர் கல்லூரிக் காளை. அம்மாநாட்டிற்கு வந்திருந்த ஈ. வே. ராமசாமி பெரியார் அண்ணுவின் பேச்சைக் கேட்டு "இந்த இளைஞனை அரசியலில் ஈடுபடுத்திவிட்டால் தன் பேச்சுத் திறத்தால், உறங்கிக் கிடக்கும் மக்களை விழித்தெழுந்து வீறுகொள்ளச் செய்வான்," என்று முடிவு கட்டினர்.

திருப்பூரில் 1935ம் ஆண்டு நடைபெற்ற இளைஞர் மகாநாட்டிற்கு வந்திருந்த அண்ணுதுரையைப் பெரியார் சந்தித்துப் பேசினர். அண்ணுதுரைக்கு அரசியலில் இருந்த துடிப்பைக் கண்ட பெரியார் அவரை ஈரோட்டுக்கு அழைத்துச் சென்று பல தத்துவ நூல்களை அவரிடம் கொடுத்து அவரை முன்னேறச் செய்தார்.

அண்ணாதுரை நீதிக்கட்சியில் சேர்ந்து உழைக்கத் தொடங்கினார். அப்பொழுது சென்னை மாநகராட்சித் தேர்தல் தொடங்கியது. அண்ணாதுரை அத்தேர்தலில் போட்டியிட்டார். ஆனால் அத்தேர்தலில் அவர் வெற்றி பெறவில்லை.

**1936**ம் ஆண்டு காங்கிரசுகட்சி அமைச்சரவை அமைத்தது சக்கரவர்த்தி ராசகோபாலாச்சாரியார் முதலமைச்சரானார். அவர் பதவிக்கு வந்த உடனே 'தமிழ் நாட்டுப் பள்ளிகளில் இந்தி மொழியை கட்டாய பாடமாக்குவேன்' என்று அறிக்கையைவிட்டார். இந்த அறிக்கையை கண்டித்து, தமிழ்ப் பேரறிஞர்களும் தலைவர்களும் எதிர்ப்பு தெரிவித்தனர் காஞ்சிபுரத்தில் பெரியார் தலைமையில் இந்தி எதிர்ப்புமாநாடு கூட்டப்பட்டது. "இப்போராட்டத்தைத் தூண்டியவர் அண்ணாதுரைதான் என்று குற்றம்சாட்டி அரசாங்கம் அவரை சிறையிலடைத்தது.

நான்கு மாதங்கள் சிறைவாசம் அனுபவித்து வெளியேறிய அண்ணா, சென்னை அடையாறு மாளிகையில் தங்கியிருந்த இளவரசர் முத்தையா செட்டியாரைக்கண்டு, தமக்குக் கல்லூரியில் ஆசிரியர் பதவி அளிக்கும்படி வேண்டிக் கொண்டார். ஆனால் அவரோ அண்ணாவை, தமக்கு அந்தரங்கக் காரியதரிசியாக நியமிக்க விரும்பினார். அண்ணாதுரை இளவரசர் கருத்தை ஏற்கவில்லை.

திருவாரூரில் நடைபெற இருக்கும் சுயமரியாதை மாநாட்டிற்கு தலைமை தாங்க, அண்ணாவை அழைத்தார் பெரியார். அண்ணாதுரையும் மறுக்காமல் அவரது அழைப்பை ஏற்றுக்கொண்டு, தலைமை தாங்கினார். பிறகு பெரியார் அண்ணாதுரையிடம் "விடுதலை" பத்திரிகையின் துணையாசிரியராகப் பணியாற்றும்படி, வேண்டினார். முதலில் அண்ணா மறுத்தார். முடிவில் பெரியார் அவரை இணங்கச் செய்துவிட்டார்.

"விடுதலை" இதழில் அவர் எழுதிய கட்டுரைகளைக்கண்டு பெரியார் மிக்க மகிழ்ச்சி கொண்டார். அவர் அண்ணாவை பலவாறாகப் பாராட்டினார். மேலும் அண்ணாதுரை தாமாகவே "திராவிட நாடு" என்ற வார இதழையும் தொடங்கினார்.

1947ல் மீண்டும் மொழிப் பிரச்சனை தலை தூக்கியது. மறுபடியும் அண்ணாதுரையின் தலைமையில் எதிர்ப்பு உருவாகியது. பின்னர் அரசாங்கம், "இந்தி கட்டாய பாடமாக இல்லாமல் விருப்ப பாடமாகத்தான் இருக்கும்" என்று அறிவித்தது இந்தி எதிர்ப்பு அணிக்கு அண்ணா தலைமை தாங்கியதால் அவரை "தளபதி அண்ணா" என்றழைத்தனர்.

1947 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ம் நாள் இந்தியா விடுதலை பெற்றது. அது நம் வாழ்விலோர் திருநாள். "அந்த நாளை எல்லா இந்திய மக்களும், விடுதலை விழாவாகக் கொண்டாட வேண்டும்" என்று அரசாங்கம் அறிவித்தது. ஆனால் ஈ. வெ ரா. பெரியார், "வெள்ளையன் நாட்டை விட்டு வெளியேறினால் மட்டும் நமக்குச் சுதந்திரம் கிடைத்ததாக எண்ணக் கூடாது. நம்மைச் சுரண்டுபவரும், தாழ்வு படுத்துபவரும் இருக்கும் பொழுது நாம் எப்படி விடுதலைப் பெற்றவராவோம். எனவே அது நமக்கு இன்பநாள் அல்ல. துக்க நாள்தான்" என்றார்.

பெரியாரின் இந்தப் பேச்சை அண்ணா ஏற்கவில்லை. அவர் "நாம் சுதந்திரம் பெற்ற இந்தத் திருநாள், உலகத்தின் முன் நம் மதிப்பை உணர்த்தும் நாள் எனவே அது துக்கநாளாகாது". என்றுஅறிக்கை விடுத்தார். இதனால்பெரியாருக்கும், அண்ணாவிற்கும் மனக்கசப்பு ஏற்பட்டது. மேலும் தம்கழகத்தில் பணியாற்றி வந்த மணியம்மையை, ஈ. வெ. ரா. பெரியார் மணந்து கொண்டார். இந்த திருமணத்தை பொருந்தாத் திருமணம் என்று கழகத்தார் சிலர் கூறினர். சிலர் இதை கைவிடும்படி வேண்டினர். ஆனால் பெரியார் முற்றிலும் மறுத்துவிட்டார். இதனால் கழகத்தில் பிளவு ஏற்பட்டது.

1949 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ம் நாள் "திராவிட முன்னேற்றக் கழகம்" என்ற பெயரில் அண்ணா தலைமையில், ஒரு புதிய இயக்கத்தைத் தோற்றுவித்தனர். "சமுதாய சீர்திருத்தம்" அக்கழகத்தின் முக்கிய கொள்கையாக இருந்தது. அக்கழகத்திற்கென ஒரு கொடியை ஏற்படுத்தினர். அந்தக் கொடி மேல்பாதி கருப்பு நிறத்தையும், கீழ்ப்பாதி சிவப்பு நிறத்தையும் கொண்டது.

## மும் முனைப்போர்

1953 ல் தமிழக முதலமைச்சராய் இருந்த சக்கரவர்த்தி திரு ராசகோபாலாச்சாரியார் ஒரு புதிய கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார். "6 வயது முதல் 11 வயது வரையுள்ள குழந்தைகள் பாதிநாள் பள்ளியில் படித்துவிட்டு, பாதிநாள் தங்கள் பெற்றோருக்குரிய குலத்தொழிலைக் கற்கவேண்டும்". இதுதான் அவரது கல்வித்திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டம் "பிறப்பில் உயர்வு தாழ்வை ஏற்படுத்தும். இது மக்களின் வளர்ச்சியை அழித்துவிடும்", என்று அஞ்சி, ஈ. வெ. கி. சம்பத் தலைமையில் எதிர்ப்பு தெரிவித்து, கழகத்தார் ஒரு போராட்டத்தைத் தொடங்கினர்.

திருச்சி மாவட்டத்தில் "டால்மியா சிமெண்ட்" தொழிற்சாலை உள்ளது. அவ்வூரின் பழைய பெயர் "கல்லக்குடி" என்பது ஆகும். ஆனால் அந்த ஊர் ரயில் வண்டி நிலையத்தின் பெயர் "டால்மியாபுரம்" என்பது ஆகும். தென்னாட்டு தலைவர்கள் எவருடைய பெயரையும், வட நாட்டார் தம் ஊர்களுக்கு விரும்பிச் சூட்டவில்லை. அப்படி இருக்க தமிழகத்தில் மட்டும் வடநாட்டவர் பெயரில் ஊரா? இது கூடாது. "டால்மியாபுரத்தைக்" "கல்லக்குடி" என்று பெயர் மாற்றம் செய்யும் வரை அங்கு அறப்போர் நடத்த வேண்டும் என்று கழகம் தீர்மானித்தது. அந்த அறப்போர் திரு. கருணாநிதி அவர்கள் தலைமையில் நடக்க ஏற்பாடாயிற்று.

குலக் கல்வித் திட்ட எதிர்ப்பு, கல்லக்குடி போராட்டம், இரயில் நிறுத்தக் கிளர்ச்சி என்று மூன்று முனைகளிலும் எதிர்த்துப் போராட முடிவு செய்தது. இதை அறிந்த அரசாங்கம் போராட்டத்திற்கு முதல் நாளே அண்ணாதுரை, நெடுஞ்செழியன், சம்பத், மதியழகன், நடராசன் ஆகியோரைக் கைது செய்தது.

ஆனால் சிறைப்படுவதற்கு முன்பே, அண்ணா போராட்ட முறைகளைப் பற்றியும், அதைக் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளைப் பற்றியும் விளக்கி ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார். அதாவது "நாம் உரிமைக்காகப் போராடுகிறோம்

என்ற கடமை உணர்வு நம்மிடையே இருத்தல் வேண்டும். நாம் மேற்கொண்டுள்ள செயல்களை சரிவர நிறைவேற்றுவது நமது கடமை ஆகும். மேலும் கடமையாற்றச் செல்லும் நாம் கண்ணியத்துடன் நடந்து கொள்ள வேண்டியது மிக அவசியம். கட்டுப்பாடு சிதைந்து விட்டால் கண்ணியம் குலைந்து விடும். கடமை மடமையாகிவிடும். எனவே எதையும் செயல்படுத்த கடமை கண்ணியத்துடன் கட்டுப்பாடும் வேண்டும்" என்று அதில் கூறப்பட்டிருந்தது. இதிலிருந்து அண்ணா எத்தகைய கட்டுப்பாடோடு கூடிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார் என்று தெரியவருகிறது. எனவே அண்ணாவின் வாழ்க்கையைப் பின்பற்றி மாணவர்களாகிய நாம் என்றும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றுடன் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

1957ல் நடைபெற்ற தேர்தலில் சட்ட மன்றத்திற்கும், நாடாளு மன்றத் திற்கும் கழக வேட்பாளர்களில் 17 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அச்சமயம் அண்ணாதுரை காஞ்சிபுரம் தொகுதியில் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். 1962ல் நடைபெற்ற தேர்தலில் கழகம் மேலும் அதிக வெற்றி பெற்றது. ஆனால் அண்ணாதுரை காஞ்சிபுரம் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியுற்றார்.

1962 சூலை மாதம் விலைவாசி உயர்வைக் கண்டித்து அண்ணாவின் தலைமையில் கழகத்தார் போராட்டம் நடத்தினர். அந்நிலையில் சீனர்கள் நம் நாட்டின் மீது படையெடுக்கும் செய்தி அறிந்த கழகத்தார் தங்கள் போராட்டத்தை நிறுத்திக்கொண்டனர். நாட்டுக்காக கழகத்தார் எதையும் செய்ய முன்வந்து நின்றனர். நாட்டு பாதுகாப்பு நிதி சேர்க்க ஊர், ஊராகச் சென்றனர். மேலும் ரத்ததானம் அளிக்க மகிழ்ச்சியுடன் முன்வந்தனர்.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் மறைவுக்குப்பின் திரு லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் பிரதமராகப் பதவியேற்றார். அவர் "1965 ஜனவரி 26ம் நாள் முதல் இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தி விளங்கும். ஆங்கிலம் துணை ஆட்சி மொழியாக இருக்கும்". என்று கூறிவிட்டார்.

அரசாங்கத்தின் இந்த அறிக்கையை எதிர்த்து, தமிழ் நாட்டின் பல பகுதி மாணவர்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். அரசினர் அடக்கு முறையைக் கையாளவே, மாணவர்கள் தடியடி, துப்பாக்கிச் சூடு முதலியவற்றுக்கு ஆளாகினர். சிலர் இறந்தனர். இதை அறிந்த அண்ணாதுரை மனம் வருந்தினார். மாணவர்களை அமைதி கொள்ளும்படி வேண்டினார் முதலில் அது பயன் தரவில்லை.

பிறகு மாணவர்களின் கொந்தளிப்பு சிறிது சிறிதாக அடங்கியது. இந்தி எதிர்ப்பை முன்னிட்டு அண்ணாதுரை, கருணாநிதி, நெடுஞ்செழியன் ஆகியோரை அரசாங்கம் கைது செய்தது.

1967 ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் கழகம் பெற்ற வெற்றி இந்திய வரலாற்றிலேயே திருப்பமாக அமைந்தது. கழகம் 138 சட்டமன்றத் தொகுதிகளைப்பெற்றது. அண்ணா தென் சென்னை வேட்பாளராய் நின்று மாபெரும் வெற்றி பெற்றார். தமிழகத்தின் கவர்னர் திரு சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள், அண்ணாவை தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பேற்க அழைத்தார்.

1967ம் ஆண்டு மார்ச்சு மாதம் 6 ம் நாள் அண்ணா முதலமைச்சர் பதவியேற்றார். தமிழ்நாடு முழுவதும் அன்று மகிழ்ச்சிக்கடலில் மூழ்கியது. அவர் பதவிக்கு வந்தபின் செய்த அரும் பெரும் செயல்கள் சிலவற்றைக் காண்போம்.



கவர்னர் உஜ்ஜல்சிங்கும், அறிஞர் அண்ணாவும்,

# தமிழ் நாடு பெயர் மாற்றம்

இந்தியா மொழிவாரி ராஜ்பங்களாக பிரிக்கப்பட்ட பொழுது பல மாநிலங்கள் மொழியின் பெயரால் அமைக்கப்பட்டன. ஆனால் தமிழ்நாடு மட்டும் "சென்னை மாநிலம்" என்றழைக்கப் பட்டது. அண்ணாதுரை பதவியேற்றதும் சட்டமன்றத்தில் சென்னை மாநிலத்திற்கு "தமிழ் நாடு" என்று பெயரிட வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ் மக்களின் அறிவு வளர்ச்சிக்காக பல பள்ளிகளும், சில கல்லூரிகளும் திறக்கப்பட்டன. பள்ளிகளில் தமிழை பயிற்று மொழியாக்கினர். பொதுப் பணித்துறை அமைச்சர் கருணாநிதி தம் துறை முழுவதையும் தமிழ் மயமாக்கினார் பஸ் 'பேருந்து' என மாறியது. தமிழ் மறையாம் திருக்குறள் ஒன்றையும் திருவள்ளுவர் படம் ஒன்றையும் பேருந்து வண்டிகளில் இன்றும் நாம் காணலாம்.

மேலும் சீர்திருத்த மணம் புரிந்து கொண்டவர்களுக்கு எல்லாச் சலுகைகளும் அளிக்கப்பட வேண்டும் என்றும், அவர்களுக்கும் சொத்தில் உரிமையுண்டு என்று சட்டத்தை திருத்தியமைத்தார்.




தலைமைச் செயலகம் பெயர் மாற்றம்.

தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு அண்ணா பொறுப்பேற்றவுடன் தமிழக அரசு தலைமைச் செயலகம் என தூய தமிழில் பெயர் சூட்டி விளக்கேற்றி வைத்து விழா எடுத்தார்

அண்ணாவின் புகழ் வெளிநாடுகளிலும் பரவியது. அமெரிக்கா, ரஷ்யா போன்ற வல்லரசுகள் தம் நாடுகளுக்கு அண்ணாவை வருமாறு அழைத்தனர். அண்ணாவின் அறிவுத்திறன், வாதத்திறன், எழுத்தாற்றல், சொல்வன்மை. கடமை உணர்வு முதலியவற்றை அறிந்து அவர்கள் மகிழ்ந்தனர்.

காலத்தோடு, வாழ்க்கையோடு பொருந்திய உண்மைகளை எளிய நடையில் பேசும் முறையை அறிமுகப்படுத்தியவர் அண்ணா அவர்கள்தான். எனவே " அடுக்கு மொழி அண்ணா " என்ற சிறப்புப் பெயர் பெற்றார்.

அண்ணாதுரை பேச்சில் எவ்வளவு வல்லவராக இருந்தாரோ அது போலவே எழுத்திலும் வல்லவராய் விளங்கினார். அவர் எழுதிய கதை கட்டுரைகளுல் சிறந்தவை "இரங்கோன் ராதா" "விடுதலைப் போரும் காந்தியும்" என்பனவையாகும். அவர் நடிப்புத் துறையிலும் சிறந்தவராய் விளங்கினார். தாம்

எழுதிய "சந்திர மோகன்" என்னும் நாடகத்தில் காகப்பட்டராகவும் "நீதி தேவன் மயக்கம்" என்னும் நாடகத்தில் இராவணனாகவும் நடித்துச் சிறப்புற்றார்

## தென்னாட்டுப் பெர்னாட்ஷா

அண்ணாதுரை " ஓர் இரவு " என்ற தாம் எழுதிய நாடகத்தின் மூலம் ஒரு புதுமையை ஏற்படுத்தினார். அந்த நாடகத்தைக் கண்டு, தலைசிறந்த எழுத்தாளரும். 'கல்கி' இதழின் ஆசிரியருமான திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அண்ணாவிற்கு " தென்னாட்டுப் பெர்னாட்ஷா " என்ற சிறப்புப் பெயரை வழங்கினார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அண்ணாவின் பேச்சாற்றலையும், எழுத்தாற்றலையும் பாராட்டி அண்ணாதுரைக்கு " அறிஞர் " என்ற சிறப்புப் பட்டத்தை அளித்தார். எனவே அன்றிலிருந்து அண்ணாதுரை " அறிஞர் அண்ணாதுரை " என்று அழைக்கப்பட்டார்.

## குண நலன்கள்.

அண்ணாதுரை இளமையிலிருந்தே அதிக தமிழ்ப் பற்றுக் கொண்டவர். கட்டுப்பாட்டை மீறுத பண்புடையவர். எதையும் தாங்கும் இதயம் கொண்டவர். நாட்டுப்பற்று மிகுந்தவர். ஏழைகள் பால் இறக்கம் கொண்டவர். அன்புள்ளம் நிறைந்தவர். பகைவரையும் மதிக்கும் பண்பு கொண்டவர். மன்னிக்கும் மனப்பான்மை மிகுதியாகக் கொண்டவர், எம்மதங்களுக்கும் வேறுபாடின்றி மதிப்பு அளிக்கக் கூடியவர்.

## உலகத் தமிழ் மாநாடு


அண்ணாவின் ஆட்சிகாலத்தில்தான் தமிழன்னை அரியணை ஏறி ஆட்சி புரியத் தொடங்கினுள். மொழிக்கு விழா எடுத்த பெருமை தமிழ் மொழிக்குத் தான் உண்டு. இரண்டாவது உலகத்தமிழ்மாநாடு தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையில் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ம் நாள் தொடங்கியது. தமிழ் வளர்க்கும் அறிஞர் அண்ணாதுரைக்கு "உருவச்சிலை திறப்புவிழா" நடந்தது. சர். ஏ. இராமசாமி முதலியார் அண்ணாவின் உருவச்சிலையைத் திறந்து வைத்து அவருடைய தமிழ்ப்பற்றினையும், அறிவுத் திறனையும் பாராட்டினுர்.

தீவுத்திடலில் பட்டிமன்றம், கவியரங்கு, கூத்தரங்கு முதலியன நடைபெற்றன. தமிழ் மாநாட்டின் ஊர்வலத்தில் தமிழ்த்தாயின் வடிவம் சித்தரிக்கப்பட்ட அலங்கார வண்டி முன்னே சென்றது. தமிழ்த்தாயும் இலக்கியக் குழந்தைகளும், மனுநீதிச் சோழனும் பசுவும், முல்லைக்குத் தேரீந்த பாரி, யானை கட்டி




போரடிக்கும் காட்சி, மாமல்லபுர சிற்பக்காட்சி முதலிய காட்சிகளை சிற்பவடிவில் வண்டிகள் தாங்கிச் சென்றன. இவ்வாறு அந்த விழாவை நமது தமிழரின் பண்பாண்டை விளக்கிக் காட்டும் வகையில் நடத்திக் காட்டிய பெருமை அண்ணாதுரை அவர்களையே சாரும்.

இந்த இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டிற்கு அமெரிக்கா, இரஷ்யா, பிரான்சு, ஆஸ்திரேலியா, ஜெர்மன், சுவிட்சர்லாந்து, இலங்கை, மலேசியா போன்ற நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 430 பிரதிநிதிகள் வந்திருந்தனர். கடற்கரை சாலையில் அமைந்துள்ள பல்கலைக் கழகத் தேர்வு மண்டபத்தில்



உலகக் கலைக் கண்காட்சி நடைபெற்றது. இத் தமிழ் விழாவிற்கு பாரதத்தின் ஜனாதிபதி திரு. ஜாகீர் உசேன் அவர்கள் நேரில் வருகைதந்து விழாவினை கண்டு மகிழ்ந்து அண்ணாவைப் புகழ்ந்தார்.

கடற்கரை சாலையில் தமிழ் வளர்த்த சான்றோர்களாகிய தமிழ் மூதாட்டி ஔவை, வள்ளுவர், கம்பர், வீரமாமுனிவர், கால்டுவெல் ஐயர், போப், சுப்பிரமணிய பாரதியார், பாரதிதாசன் முதலியோருக்கு சிலை அமைத்தனர்.



ஏல் பல்கலைக் கழகத்தில் அண்ணு

அண்ணாதுரையின் பெருமையைக் கண்ட அமெரிக்காவிலுள்ள ஏல் பல்கலைக்கழகம் அவரை அழைத்துச் சிறப்பித்தது பல்கலைக்கழகம் "சப்பெல் லோசிப்" என்ற பட்டத்தை வழங்கி அண்ணாதுரை அவர்களைச் சிறப்பித்தது அவரது தமிழ் பற்றையும், ஆர்வத்தையும் கண்டு வியந்து போற்றியது.



ஏல் பல்கலைக் கழக மாணவர்களுடன் அண்ணா


அண்ணுதுரை பல்கலேக்கழக மாணவர்களுக்கு திருக்குறள் விளக்க வகுப்பு நடத்திஞர். அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டனுக்குச் சென்று, உலகக் கிறிஸ்தவ மதத் தலைவரான போப் ஆண்டவரைச் சந்தித்தார். தன் அன்புக்கு அடையாளமாக திருக்குறளின் ஆங்கிலப் பதிப்பொன்றை அவருக்கு அளித்தார். பின்பு தாயகம் திரும்பிஞர்.




போப் ஆண்டவருடன் அண்ணு

தமிழகம் திரும்பிய சில மாதங்களில் அண்ணாதுரைக்கு திடீரென உடல் நலக் குறைவு ஏற்பட்டது, அவருக்கு உணவுக் குழாயில் புற்று நோய் ஏற்பட்டுள்ளதுஎன்பதை மருத்துவர்கள் கண்டறிந்தனர். எனவே அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதற்காக 1968ம் ஆண்டு செப்டம்பர் மாதம் அமெரிக்கா சென்ருர். நியூயார்க் நகரில் உள்ள மருத்துவமனையில் டாக்டர் தியோடர் மில்லர் என்ற புகழ் பெற்ற அறுவை மருத்துவர் அறுவை சிகிச்சையை நடத்திஞர்.

ஒரு மாத கால ஓய்வுக்குப்பின் அண்ணாதுரை அவர்கள் சென்னைக்குத் திரும்பிஞர். அறுவை சிகிச்சையை வெற்றியுடன் முடிதுத்க் கொண்டு நலம் பெற்று தாய்நாடு திரும்பிய அண்ணாதுரை அவர்களை மக்கள் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்றனர். மருத்துவர்கள் அவருக்கு பூரண ஓய்வு தேவை என்று கூறியிருந்த பொழுதிலும், அவர் ஓய்வு எடுதுத்க்கொள்ளாமல் அரசாங்க அலுவல்களில் பூரணமாக ஈடுபட்டார். தன் உடல் நல குறைவையும் பாராட்டாது தமிழ்நாடு பெயர் சூட்டு விழாவில் கலந்து கொண்டார்.



நலம் பெற்றுத் திரும்பிய அண்ணுவுக்கு வரவேற்பு



கலைவாணியின் சிலை


அண்ணுதுரை கலந்து கொண்ட கடைசிப்பொதுநிகழ்ச்சி, கலைவாணர் திரு. N. S. கிருஷ்ணன் அவர்களின் சிலை திறப்புவிழா நிகழ்ச்சியாகும் அவர்கலை வாணரின் சிறப்பியல்புகளை, மிகத் தெளிவாக அந்த விழாவில் எடுத்துக் கூறினர். அது போலவே கலைவாணர் இறப்பதற்கு முன் ஒரு விழாவில் கலந்து கொண்டு அண்ணுதுரையின் படத்தைத்திறந்துவைத்தார். இருவரும் நெருங்கிய நட்புள்ளம் படைத்தவர்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

1969ம் ஆண்டு ஜனவரி மாதம் 25ம் தேதியன்று அவருக்கு அடையாறு புற்றுநோய் மருத்துவ மனையில் இரண்டாவது முறை அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டது. முதலில் அவருக்கு அறுவை சிகிச்சை செய்த டாக்டர் மில்லர் அவர்களே மறுபடியும் அந்த சிகிச்சையைச் செய்தார். சனவரி 29ம் தேதியன்று அண்ணுதுரை அவர்களின் உடல்நிலை கவலைக்கிடமாகியது. மறுநாள் நுரையீரலில் கோளாறு ஏற்பட்டது. அதன் விளைவாக இதயத்துடிப்பு நின்றது. அண்ணுதுரை நினைவிழந்தார். அவரது உடல் நிலை மிகவும் மோசமாகியது.

1969ம் ஆண்டு பிப்ரவரி மாதம், 2ம் நாள், நள்ளிரவு 12 மணிக்கு அண்ணாவின் உயிர் அவர் உடலைவிட்டுப் பிரிந்தது. அண்ணாவின் மறைவு தமிழகம் முழுவதும் பரவியது. அவர் பொன்னுடலைக்காண நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் வெள்ளம் திரண்டு வந்தது.

அண்ணாதுரையின் உடல் பொதுமக்கள் பார்வைக்காக, ராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தது. மக்கள் வெள்ளம் கண்ணீரும், கம்பலையுமாய் மணிக்கணக்காக காத்திருந்து இறுதி அஞ்சலி செலுத்தினர். இந்திய வெளிநாட்டு, உள்நாட்டு அலுவலரும், தூதுவரும் மலர் வளையம் வைத்து மரியாதை செலுதினர் மத்திய அரசின் சார்பில் உள்துறை அமைச்சர் திரு. சவான் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டார்.

அண்ணாதுரையின் உடல் பீரங்கி வண்டியில் இராணுவ மரியாதையுடன் ஊர்வலமாகப் புறப்பட்டது. அது ஏழு கல் தொலைவு கடந்து சென்னைக் கடற்கரையை அடைந்தது.



சென்னைக் கடற்கரையில் பல்கலைக் கழகத்திற்கு முன் அண்ணாவின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. நம் அரசினர் அண்ணாதுரையின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில், சமாதி கட்டி, அதன் மீது "எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது" என்று சலவைக்கல்லில் பொறித்து வைத்துள்ளனர்.

அண்ணா அவர்கள் தாம் செய்த அரும் பெருஞ் செயல்களால் புகழேணியின் உச்சிக்கே சென்றுவிட்டார். அவரது புகழ் இன்றும், "குன்றின் மேலிட்ட விளக்கு போல" பிரகாசிக்கிறது. எனவே மாணவாகளாகிய நாமும் அண்ணாவின் வழியைப் பின்பற்றி சென்றால், நம் நாடும், நம் நாட்டு மக்களும் முன்னேற்றமடைவார்கள் என்பதில் ஐயமேதுமில்லை.

" உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்தில் எல்லாம் உளன்"

# அறிஞர் அண்ணா

3, 4, 5. வகுப்புகளுக்குரியது.

விலை 60 காசு